Discussion Questions

1. பாரம்பரியத்தின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடவும்.

2. கதையின் தலைமை கதைமாந்தர் ஒவ்வொரு ஆண்டும் வீட்டில் காட்சிப்படுத்த கிறிஸ்துமஸ் மரத்தை வாங்கிவந்து கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுகிறார். உங்கள் குடும்பத்தில் ஏதேனும் பாரம்பரிய வழக்கங்கள் உள்ளதா?

3. ஒரு வீட்டை வாங்கினால் வாழ உகந்த ஓர் இல்லத்தை அமைத்துவிட்டோம் என்று பொருள்படுமா?

4. உங்களுடைய வீட்டில் உங்களுக்கு மிக பிடித்த விஷயம் எது?

5. இவை இல்லாமல் உங்களால் வாழ முடியாது என்று நீங்கள் நினைக்கும் 3 மின்சாதனங்களைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.

6. மரபுடைமைப் பாதுகாப்புப் பகுதியில் அமைந்துள்ள குந்துதல் கழிப்பறைகளைக் கொண்ட ஒரு வீட்டில் நீங்கள் வாழ விரும்புவீர்களா அல்லது சாதாரண வட்டாரத்தில் உள்ள அமர்வு கழிவறைகளைக் கொண்ட ஒரு வீட்டில் நீங்கள் வாழ விரும்புவீர்களா? ஏன்?

7. மரபுடைமை கட்டிடங்களைப் பேணிக் காப்பது ஏன் முக்கியமாக கருதப்படுகிறது? சிங்கப்பூரில் உள்ள சில மரபுடைமை கட்டிடங்களின் பெயர்களை உங்களால் குறிப்பிட்டுச்சொல்ல முடியுமா?

8. கிறிஸ்துமஸ் உங்களுக்கு எந்த வகையில் முக்கியத்துவம் வாய்ந்தது? நீங்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையை எவ்வாறு கொண்டாடுவீர்கள்?

9. கதையின் ஆண் கதாபாத்திரத்தையும் பெண் கதாபாத்திரத்தையும் பற்றிய உங்கள் அபிப்பிராயம் என்ன?

10. குந்துதல் வழமை, அமர்ந்தால் புதுமை - இதன்வழி வாசகர்களுக்கு என்ன கருத்தை நூலாசிரியர் கொண்டு சேர்க்க விரும்புகிறார்?

11. சிங்கப்பூர் வாழ்க்கையின் தனித்துவமான அம்சங்களைச் சித்திரிப்பதற்காக நூலாசிரியர் சில சீன எழுத்துக்களை உருவாக்கியுள்ளார். இதைப்பற்றி உங்கள் கருத்து என்ன?